# குளியாப்பிட்டி நகர சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 11 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 செப்தெம்பர் 12 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் குளியாப்பிட்டி நகர சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள எனது அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குளியாப்பிட்டி நகர சபையின், செயற்பாட்டு நிலவரத்தையும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விடயங்களின் நிதிப் பெறுபேறுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பஸ் நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக பெறப்பட்ட கடனுக்காக மீளாய்வாண்டிற்குரிய ரூபா 1,092,496 தொகையான 2 கடன் தவணைப் பணம் செலுத்தப்பட்டிராததுடன் அது கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடைத் தொகுதிகளை நிர்மாணிப்பதற்காகப் பெறப்பட்ட கடனுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் அந்த நிறுவனத்தின் மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் ரூபா 4,651,346 தொகையான கடன் மீதி செலுத்துவதற்கு காணப்பட்ட போதிலும் அது கணக்குளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணமாக ரூபா 7,819,862 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் முத்திரைக் கட்டண நிலுவை 2009 ஆம் ஆண்டிற்காக ரூபா 975,970 தொகையும், 2010 இற்காக ரூபா 2,768,601 தொகையும் ஆக ரூபா 3,744,571 காணப்பட்டது. அதன் பிரகாரம் அந்த வருடத்திற்காக மிகையான பற்றுச்சீட்டிடல்களினால் ரூபா 4,075,291 தொகை பிழையான வருமானக் கடன்பட்டோர் மீதியொன்று எழுந்திருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

#### கணக்காய்விற்காக தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 29,975,331 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,387,723 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,779,564 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மீளச் செலுத்த வேண்டிய வைப்பின் கீழ் ரூபா 1,004,056 தொகை நீர்ச் சேவை மதிப்பீட்டு வைப்பாக காணப்படுவதுடன் பாவனையாளர்களுக்கு நீர் இணைப்பை வழங்குவதற்காக பெறப்பட்ட அந்த

வைப்புப் பணம் உரிய செயற்பாடு நிறைவடைந்ததன் பின்னர் வேலை அறிக்கை தயாரிக்கப்பட்டு தீர்த்து வைக்கப்படாமல் பல வருடகாலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) வங்கிக் கணக்கிலிருந்து வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 18,000 பெறுமதியான 4 காசோலைகள் காணப்பட்டன.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 15,148 | 9,435 | 9,842 |
| (ii) | வாடகை | 9,560 | 5,656 | 633 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 12,155 | 12,022 | 258 |
| (iv) | ஏனைய வருமானம் | 47,321 | 20,425 | 9,623 |

### 2.3.3 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டபணம் | 45,750 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,897,970 |

### 2.3.3 ஆதன வரி அறவிடல்

மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி ரூபா 5,846,323 நிலுவை காணப்பட்டதுடன் தெரிவுக் கணக்காய்வின் பிரகாரம் அதனுள் நிலுவை ஆதன வரியின் கீழ் 2 வீதிகளுக்குரிய 18 சந்தர்ப்பங்களில் 07 - 21 காலாண்டு வீச்சில் ரூபா 174,554 தொகையான நிலுவை மீதி காணப்பட்டது. இந்த நிலுவையினை அறவீடு செய்வதற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 170 ஆவது பிரிவன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பிடியானை பிறப்பித்து சொத்துக்களை தடைசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீர்க் கட்டணம்

நீர்க்கட்டணத்தின் கீழ் ஹெட்டிபொல – குருணாகல் வீதி பொலீஸ் விடுதிகளில் 11 தொடக்கம் 41 மாதங்கள் வரையான காலத்திற்காக ரூபா 70,263 தொகையான 18 நிலுவை மீதிகள் காணப்பட்டதுடன் நீர் வழங்கல் துண்டிக்கப்பட்ட நீர்ப்பாவனையாளர்களிடமிருந்து ரூபா 12,193 தொகையும் ஆக ரூபா 82,456 நிலுவை நீர்க்கட்டணம் காணப்பட்டது. அவ்வாறே மீளாய்வாண்டின் இறுதியில் நீர்க் கட்டணத்தின் கீழ் ரூபா 2,208,561 தொகையான நிலுவை காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்காக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 வனோத வரி

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட வனோத வரி வருமானம் ரூபா 1,787,260 ஆக இருந்ததுடன் ஆண்டிற்குரிய பற்றுச்சீட்டிடல்கள் ரூபா 735,917 ஆக இருந்தது.

### 2.4 மனித வள முகாமைத்துவம்

நிருவாக சேவையின் பதவியான செயலாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதன் பதிற் கடமைக்காக முகாமைத்துவ சேவையின் உயர் வகுப்பிலுள்ள

உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். தொழிலாளர், காவலாளி, சாரதி போன்ற பதவிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 60 ஆக இருந்த போதிலும் அதன் கீழ் 52 நிரந்தர ஊழியர்கள் இருந்ததுடன் நாட்கூலி மற்றும் அமைய அடிப்படையில் சபையில் சம்பளம் பெறுகின்ற 70 பேர் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதன் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 2.5 ஒப்பந்த நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது விசாக்கா மாவத்தை மற்றும் தண்டகமுவ சேவை நிலையத்தின் அருகிலுள்ள வீதி ஊடாக ரூபா 344,720 செலவில் மதகு மற்றும் காண் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் மதகுக்கு மேல் நிர்மாணிக்கப்பட்ட காண்களில் நீர் வடிந்து செல்லுதல் உரிய முறையில் நடைபெறாமையினால் நிர்மாணிக்கப்பட்ட காணுக்கு அருகில் நோக்கம் நிறைவேற்றப்பட்டமையை 2011 ஒக்தோபர் 18 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) சப்புமல் மாவத்தையின் எஞ்சிய பகுதிக் காணை நிர்மாணிக்கும் வேலைக்காக ரூபா 311,805 தொகையில் 2011 செப்தெம்பர் 15 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அருகிலுள்ளவர்களின் எதிர்ப்பின் காரணமாக உரிய வேலைகளை நிறைவேற்றல் கைவிடப்பட்டிருந்தது.

## 2.6 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 208,596 தொகையான ஊழியர் கடன் மீதியில் 2000 ஆம் ஆண்டில் இடம் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 27,137 தொகையான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்ததுடன் ஓய்வூதிய பணிக்கொடையும் இறுதியில் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சபையினால் முறையான பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்கள் பதிவேடும் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கிரமமாக காணி மற்றும் கட்டிடங்கள்

மெய்மையாய்வு செய்யப்பட்டு சபைக்குச் சொந்தமான அவ்வாறான சொத்துக்கள் தொடர்பிலான உரிமை உறுதிப்படுத்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) குளியாப்பிட்டி நூலகத்தின் 2010 இன் பொருள் மெய்மையாய்விற்காக ரூபா 52,706 பெறுமதியான 454 புத்தகங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அது தொடர்பாக மெய்மையாய்வுச் சபையின் சிபார்சுகள் 2012 யூலை 15 வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் அகற்றுவதற்கு சிபார்சு செய்யப்பட்ட 72 பொருள் வகைக்குரிய 333 அலகுகள் தொடர்பாக உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குப் பங்களிப்புப் பணம் செலுத்த வேண்டிய ஊழியர்களுக்கு சபையினால் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 6,423,048 ஆகக் காணப்பட்டது.

## 2.7 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் சபையின் பாதீட்டின் பிரகாரம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 11,945,000 தொகையான 21 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. சபை அதிகாரப் பிரதேசத்தில் 14 கிலோமீற்றர் வீதி அமைப்பு மற்றும் கி.மீ 34 ஆன காண் முறைமைகள் காணப்பட்டதுடன் அதில் கி.மீ. 9 வீதி அமைப்பு மற்றும் கி.மீ. 12 அளவான காண் முறைமைகள் பராமரிக்கப்பட்டிருந்தது. அதற்குரிய பூர்த்தி செய்யப்பட்ட வேலை அறிக்கை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்திற்குரிய கூட்டிணைந்த திட்டம் மற்றும் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத்திட்டம் என்பன காணப்படவில்லை.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நியமிக்கப்பட்டிராததுடன் உள்ளகக் கணக்காய்வு நிகழ்சிசித்திட்டத்தின் கீழ் போதியளவான உள்ளகக் கணக்காய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) ஒப்பந்த நிருவாகம்